**செய்தி வெளியீடு**

**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செ.வெ.எண். 113** **நாள் : 14.08.2018**

# இந்திய அரசின் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற உள்கட்டமைப்பு துறை வெளியிட்டுள்ள வாழ்வதற்குரிய தரவரிசையில் சென்னை மாநகரம் இந்திய அளவில் 14ம் இடத்தைப் பெற்றுள்ளது.

இந்திய அரசின் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற உள்கட்டமைப்பு துறையானது, மக்கள் தொகையின் தேவைக்கேற்ப தேர்ந்தெடுக்கப்பட்ட 111 நகரங்களில் வாழ்க்கை தரத்தினை அளவிடுவதற்கும், நகர்ப்புறத்தின் உட்கட்டமைப்பை மதிப்பீடு செய்வதற்கும் வாழ்வதற்குரிய தரவரிசையினை (Livebility Standards) வெளியிட்டுள்ளது. அதில் சென்னை மாநகரம் வாழ்வதற்குரிய தரவரிசையில் இந்திய அளவில் 14ம் இடம் பெற்றுள்ளது.

வாழ்வதற்குரிய தரவரிசையில் 15 பிரிவுகளின் கீழ் 547 முக்கிய செயல்திறன் காட்டிகள் (Key Performance Indicators) கண்டறியப்பட்டன. இதில் சென்னை சீர்மிகு நகர நிறுவனம் இதற்கான ஒருங்கிணைப்பு அமைப்பாக செயல்பட்டு எல்லா துறைகளில் இருந்தும் செயல்திறன் காட்டிகளுக்கான தேவையான தகவல்களை சேகரித்து வழங்கியது.

இத்தகவல்களின் அடிப்படையில் மத்திய அரசு வெளியிட்டுள்ள தரவரிசையில், சென்னை மாநகரம் 40 இலட்சத்திற்கு மேல் மக்கள் தொகை கொண்ட நகரங்களில் இரண்டாம் நிலையும், அகில இந்திய அளவில் 14ம் இடமும், 15 பிரிவுகளில் 10 பிரிவில் முதல் 20 விழுக்காட்டிலும், போக்குவரத்து கட்டமைப்பில் 3ம் இடத்தையும், பொது திறந்தவெளி வசதியில் 4ம் நிலையும் பெற்றுள்ளது.

மேலும், கலப்பு திறந்த நிலப்பயன்பாட்டில் முதல் 10ம் தரவரிசையிலும், உறுதிப்படுத்தப்பட்ட குடிநீர் விநியோகம் மற்றும் கழிவுநீர் மேலாண்மையில் 20ம் தரவரிசையும், ஆளுமை, கல்வி, பாதுகாப்பு, இனம் மற்றும் கலாச்சாரம் ஆகிய பிரிவுகளில் நல்ல தரவரிசையும், முக்கிய தரவரிசைக்கான இனத்தில் உள்கட்டமைப்பில் 12வது இடத்தையும், சமூக உள்கட்டமைப்பில் 14வது இடத்தையும் மற்றும் நிறுவன வசதியில் 20வது இடத்தையும் பெற்றுள்ளது.

ஐக்கிய நாடுகளின் அமைப்பால், உருவாக்கப்பட்ட நிலையான முன்னேற்றத்திற்கான இலக்கினை அடைவதற்கு இந்த வாழ்வதற்குரிய தரவரிசை ஏதுவாக இருக்கும்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**

**பெருநகர சென்னை மாநகராட்சி**